2011 ஜனவரி 12]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

சமுதாயக் கூடம்

***120138—திருமதி பெ. பிரபாவதி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளஞ்சிவாடி, காமராஜபுரம் பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்குச் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளஞ்சிவாடி, காமராஜபுரம் பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.

திருமதி பெ. பிரபாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளஞ்சிவாடி மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் அதிகமாக ஆதி திராவிட மக்கள் வசிப்பதால், சமுதாயக் கூடம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

அதேபோல, திருப்பூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நல வட்டாட்சியர் அலுவலகங்கள், திருப்பூர், காங்கேயம் என இரண்டு இடங்களில்தான் உள்ளன. உடுமலைப்பேட்டை மற்றும்

மடத்துக்குளம் வட்டங்களுக்குத் தனியாக தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் உருவாக்கப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பின்னர், இதுவரை 41 சமுதாயக் கூடங்கள் 3 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கு 110 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதில், 202 குடியிருப்புகளுக்கு தலா 18 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. திருப்பூர் மாவட்டத்திற்கு மட்டும் 6 சமுதாயக் கூடங்கள் நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள தாராபுரம் ஒன்றியம், புதூர் ஆதி திராவிடர் காலனியில் 18 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அங்கு இடவசதி இருக்குமென்று சொன்னால், நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

அதுபோல், தனி வட்டாட்சியர் அலுவலகம் வேண்டுமென்று இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் இந்த அவைக்கு வந்தவுடன் இப்போது என்னிடம் தெரிவித்தார்கள். உடனடியாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களை வைத்து இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். அந்தக் கோரிக்கையையும் உரிய முறையில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.

திருமதி பெ. பிரபாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதியில், அங்கலக்குறிச்சி மற்றும் கரியன்செட்டிபாளையம் ஊராட்சிகளில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கூறியிருக்கின்றேன். அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்டவேண்டி அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வரப்பெற்றிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கைக்கேற்ப, தேவை மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள இடங்களில், இடவசதி இருக்கின்றபட்சத்தில் நிதிநிலையைப் பொறுத்து சமுதாயக் கூடம் கட்ட அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

கட்டட வசதி

***113741—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) காங்கேயம், வீரணம்பாளையம், பட்டக்காரன்புதூர் பால் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?